
ஸ்ரீ விலக்ஷணானந்தர்

திருவாய் மலர்ந்தருளிய

# குமணாரண்ய குஞ்சரம்



8-1-2012 ஞாயிற்றுக்கிழமை

117ம் ஆண்டு ஜெயந்தி விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

-: வெளியீடு :-

டாக்டர் திருமதி ழே. அனந்தகிருஷ்ணா

ஆதம்பாக்கம், சென்னை 88. ☎ 2245 0119 செல் : 92821 04459



ஓம் தத் சத்

# உபோற்காதம்

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் குமணச் சக்கரவர்த்தி தர்பார் நடாத்தி வந்த திவ்ய ஆரண்யத்தில் இருபது நாள் நிருவிகற்ப சமாதி, சகச ஸமாதி முதலிய நிஷ்டையிலிருந்தனர். அத்தருணம் நாள்தோறும் காலை, மாலை வனத்தில் உலாவும் போது எதிரில் கண்ட கானகக் காக்ஷிகளை ஆத்மஞான பரமாகப் பொருத்திக்கூறி அவ்வண்ணம் அனுஷ்டிக்கக் கூடிய ஓர் உத்தம சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வனத்துள் ஓர் ஞான சித்தராகிய பிரஹ்ம ஞானி சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாரென்பதையும் இந்நூலில் விளக்கிக் காட்டியிருக்கிறது.



## 3. பற்றும் புல்

22-10-20 காலை.

சரபோஜி ராஜன் சாந்தவனத்தில் மூன்று நாலடிவுயரம் வரை வளர்ந்துள்ள ஓர் வகைப் புல்லின் நுனிக்கதிர் முள்போல எவ்வளவு ஜாக்கிரதையாகச் சென்றாலும் வஸ்திரங்களில் பற்றி விடுகிறது. அதுபோல பிரபஞ்ச வனத்தில் மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை என்ற புற்கள் படர்ந்துவுயர்ந்து முதிர்ந்து உச்சியில் பற்றுள்ள கதிர்களோடு தயாராயிருக் கின்றன. எவ்வளவு ஜாக்கிரதையாகச் சென்றாலும் இரண டொன்றாவது பற்றி விடும். இதற்காகவே சுகர் முதலான மஹரிஷிகள் உலகத்திலேயே உலாவக் கூடாதென்று மூன்றவஸ்தைகளையுந் தாண்டி துரியவனத்திலும் துரியாதீத ஆச்ரமத்திலுமாக சஞ்சரிக்கிறார்கள். அப்படி சஞ்சரிக்கிற சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **அத்யாத் மப்புவிராஜர்** தங்கி வருகிறார்.

## 4. பூமி

22-10-20 காலை.

குமணாச்ரம வனத்தில் தந்த தாவனஞ் செய்வதற்காக ஜலத்தைப் பூமியிலூற்றியவுடன் அந்தப் பூமி ஜலத்தை இழுத்ததுமன்றி உடனே கனிந்து விட்டது. மற்றோரிடத்தில் ஜலமூற்ற ஜலத்தை அந்த பூமி இழுக்காமல் மேலே



படிந்திருந்தது. பூமியும் கடினமாகவே இருந்தது. அதுபோல மனதென்னும் பூமியில் மஹான் உபதேசப் பாத்திர வாயிலாக ஞான ஜலமூற்றச் சில பூமிகள் ஜலத்தைக் கிரகித்து உடனே கனிந்து விடுகின்றன. பல பூமிகள் எவ்வளவு உபதேச ஞான ஜலமூற்றியும் கிரகிக்காமல் கற்போலே யிருக்கின்றன. இவ்விரண்டில் ஞான ஜலம் பட்டவுடன் கனியக் கூடிய மனதுடைய சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **மஹத்தீஸ்வர யோகீஸ்வரர்** இருந்து வருகிறார்.

## 5. வலை

22-10-20 மாலை.

குமணானந்த வனத்தில் அமைக்கப்பட்ட சிதானந்தா ச்ரமத்தில் இன்று மாலை 4 மணிக்குக் கொசு வலைக்குள் உட்கார்ந்து கண்ணை மூடிக் கொண்டிருந்தபோது ஓர் பெரிய கொசு எப்படியோ வலைக்குள் சிக்கிக் கொண்டு வெளியிற் புறப்பட முடியாமல் துவாரத்தை எட்டியெட்டிப் பார்த்து வெகு தீவிரமாயிருந்தது. அதை உடனே எடுத்து விட்டுவிட்டேன். அதுபோல பிரபஞ்ச வலைக்குட்பட்டு விழிக்கிற பல மனிதர் களில் வலையை விட்டு வெளிப் புறப்படுகிற எண்ணத்தோடு தீவிரமாய் பிரபஞ்ச வலை துவாரத்தையெட்டி யெட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிற சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **தேஜோமய புருஷர்** வசித்து வருகிறார்.

## 6. சர்ப்பம்

22-10-20 மாலை.

குமணராஜா தர்பார் நடத்திய வனத்தில் ஏகாந்தமாகப் போகும்போது ஓர் புற்றில் தலையை மட்டும் வெளியில் வைத்துக் கொண்டு க்ஷத்திரிய சர்ப்பமொன்று தூங்கிக் கொண்டிருந்தது. நான் சில நிமிஷங்கள் வரையில் நின்றேன். பாம்பு நகரவில்லை.அப்பால் ஓசை கொடுத்தேன். திடீரென்று என்னைப் பார்த்து விட்டு புற்றுக்குள் ஓடி விட்டது. அதுபோல துரிய துரியாதீதப் புற்றுக்குள் சதா வசித்துக் கொண்டிருக்கிற ஞானானுபூதி பெற்ற மஹான்களாகிய க்ஷத்திரிய சர்ப்பங்கள் ஜாக்கிராவஸ்தையென்னும் புற்றின் வாசலில் தலையை நீட்டி மனதை உலகத்தில் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஓசையில்லாத சிஷ்யர்கள் போனால் திவ்யமான காக்ஷி கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன. கொஞ்சம் ஓசை யெழுப்பிய சிஷ்யர்களைக் கண்டவுடன் திடீரென்று அந்தரங்க குகைக்குள் சென்று விடுகின்றனர். அப்படி ஓசை அடங்கிய சிஷ்யர்களை நோக்கமாய்க் கொண்டு இவ்வனாந்தரத்துள் ஓர் **ராஜராஜேஸ்வர நிர்வாண யோகி** சஞ்சாரஞ் செய்கிறார்.

## 7. எழுத்து

23-10-20 காலை.

குமணாச்ரம வனாந்தரத்தில் முக்குண முறையை முடிக்க வேண்டி முடித்தபின் பௌண்டன் பேனாவால் எழுத ஆரம்பித்ததில் மை வரவில்லை. பலமாக உதறிவிட்டு எழுத, எழுத வந்தது. அதுபோல ஆரம்பித்ததில் ஞானத்தை மனதில் எழுத ஆரம்பிப்பவர்கள் ஆரம்பத்தில் மனதிலுள்ள மாயை முதலிய சலன வடிவமான சகல பற்றையும் பலமாக உதறி விட்டு எழுதினால் எழுத்து வெகு நன்றாயிருக்குமாதலால் அப்படி எழுதக் கூடிய சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **மஹா சன்யாஸி** இருந்து வருகிறார்.



## 8. நமஸ்காரம்

23-10-20 மாலை.

குமணார்ப்புத வனத்தில் உலாவி வரும்போது ஓர் பெரியவர் வந்தார். அவரை மற்றொருவன் நமஸ்கரித்தான். உடனே அந்தப் பெரியவர் நீ யார்? நமஸ்காரம் செய்தவன் யார்? எதற்காக நமஸ்கரித்தாய்? யாரை நமஸ்காரம் செய்தாய்? ஏன் நமஸ்காரம் செய்தாய்? நமஸ்காரம் யாரைச் சேருகிறது? என்றார். அதுபோல உள்ளபடி நமஸ்காரங்களெல்லாம் உண்மையில் எவரைச் சேருகிறதென்று கண்டுபிடித்திருக்கக் கூடிய ஓர் அறிவார்ந்த சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **தேஜோஜ்வலர்** வசித்து வருகிறார்.

## 9. சூரியன்

24-10-20 காலை.

குமணராஜன் தங்கியவனத்தில் தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கும்போது கிழக்கே திரும்பினேன். சூரியன் அப்போதுதான் உதயகிரியினின்று ஆயிரம் கிரணங்களோடு

தோன்றினான். நான் சூரியன் முகத்தை இடைவிடாது பத்து நிமிஷம் உற்று நோக்கினேன். பின் நாலாபக்கங்களிலும் திரும்பிப் பார்த்தேன். பார்க்குமிடமெல்லாம் சூரியனாகவே தோன்றிற்று. அதுபோல பார்க்குமிடமெல்லாம் பரமாத்மாவாகத் தோற்றி அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடிய ஓர் அபார சிஷ்யனைப் பார்வையாய் இவ்வனத்துள் ஓர் **சுவாதந்திரிய புருஷர்** வசித்துக் கொண்டிருக்கிறார்.

## 10. நித்திரை

25-10-20 இரவு.

குமணாம்புஜகோள வனத்தில் நேற்றிரவு ஓர் மரத்தடியில் ஒருவர் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தார். அவரிடம் சென்று பார்க்க மூக்கில் வாயுவின் இயக்கமில்லை. மூக்கின் துவாரத்தின் கீழே கையை வைத்துப் பார்க்க ஓர் அங்குலம் சுவாஸம் கூட இல்லாமல் இருந்தது. தூங்காமல் தூங்குகிறார் போலிருக்கிறது என்று நினைத்து திரும்பி விட்டேன். அதுபோல் அடியோடு பிராணனை உள்ளே நிறுத்தி நனவிற் சுழுத்தி நிலையை நாடிய உத்தமோத்தம சிஷ்யனைத் தேடிக் கொண்டு ஓர் **தேவாம்சதீரர்** இவ்வனத்தில் தங்கியிருக்கிறார்.

## 11. அடக்கம்

25-10-20 இரவு.

குமணராஜ தபோவனத்தில் உலாவி வரும்போது ஓர் மஹான் என்னைக் கண்டு தனது சொந்த இடத்திற்கு



மெதுவாக நகர்ந்து விட்டார். அதுபோல உலக விஷய மோகாந்தகார வஸ்துவைக் கண்ணாலே கண்டவுடன் தனது யதார்த்த நிலையில் மனதையுடனே சேர்த்து விடக்கூடிய ஓர் ஆத்ம ஞானாதிகாரமுள்ள சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வாரண்யத்தில் ஓர் **அமானுஷ புருஷர்** யதேச்சாதி காரத்துடன் இருக்கிறார்.

## 12. தியானம்

25-10-20 இரவு.

குமணப் புரவலன் தர்பார் நடத்தி வந்த சித்திர மேடையின்மீது ஓர் கணக்காளி மைக்கூட்டில் மையை தொட்டுத் தொட்டு எழுதினான். மற்றொருவன் தொடாமல் எழுதினான். அதுபோல சிதாகாச மேடையின் மேலேறி விட்டு விட்டு தியானிக்கக் கூடிய விச்சின்ன தியானமின்றி, விடாமல் தியானிக்கக் கூடிய சந்ததத் தியானத்தை அனுஷ்டித்து வரக் கூடிய ஓர் ஆச்சரியமான சிஷ்யனை எதிர்நோக்கிய வண்ண மாய் இவ்வாரணயத்துள் ஓர் **தவராஜர்** சஞ்சாரஞ் செய்கிறார்.

## 13. ஊதுபத்தி

26-10-20 காலை.

குமணச் சக்கிரவர்த்தி கோகன வனத்தில் அமைக்கப் பட்டிருக்கிற சிதானந்தாஸ்ரமத்தில் பலமான ஊதுபத்தி யொன்று அக்னியிட்டு வைத்திருந்தது. பற்றியெரிந்த

இடங்களில் ஊதுபத்தி நிற்கப் பலமின்றி ஒடிந்து கொண்டே வந்ததுந் தவிர கடைசியில் ஒன்றுமில்லாமற் போய்விட அதன் வாசனை மட்டும் மிஞ்சியது. அதுபோல பலமான சங்கற்பங் களோடு கூடிய மனதென்னும் ஊதுபத்தியில் ஞானாக் கினியை வைத்துவிட்டு எரிந்த இடங்களிலெல்லாம் பல மின்றிப் போனபின்பு பூராவும் வெந்தவுடன் மனமேயின்றி அதன் சாத்வீக ஜீவன் முக்தி வாசனை மட்டும் மிஞ்சும்படி செய்து கொண்ட அதிக ஆற்றலுள்ள ஓர் உத்தம சிஷ்யனை எதிர்பார்த்தவண்ணமாய் இவ்வனாந்தரத்துள் ஓர் **பரமாத்ம தரிசனி** வசித்துக் கொண்டிருக்கிறார்.

## 14. மயக்கம்

26-10-20 காலை.

குமண மன்னன் கூர்மை செலுத்திய வனத்தில் ஓர் பக்ஷி வெகு பிரமாத சப்தத்துடன் திடுக்கிடும்படி கூவியது. சமீபத்திற் சென்று பார்க்க வெகு அற்ப ஜந்துவாக இருந்தது. அதுபோல பிரபஞ்ச மயக்க வஸ்துக்களெல்லாம் தூரப் பார்வைக்கு மட்டும் வெகு அலங்காரமும் மயக்கமுமாகத் தெரிகிறதேயன்றி சமீபத்திற் சென்று பார்க்குங்கால் ஓர் ஆற்றலுமில்லாத அற்ப விஷயமாகவே முடியுமென்றதை அனுபவத்தில் அப்படியே கண்ட ஓர் மஹத்துவமுள்ள சிஷ்யனை நோக்கியவண்ணமாய் இவ்வாரண்யத்துள் ஓர் **சூக்ஷுமப் பிரகாசர்** வசித்து வருகின்றார்.



## 15. திருகு கள்ளி

26-10-20 மாலை.

குமணக் குமரன் காட்டில் ஒரு திருகுக் கள்ளிச் செடியில் ஓர் மனிதன் பால் தட்டிக் கொண்டிருந்தான். அதில் வந்த பால் உடனே வற்றி விட்டது. அதுபோல மனதைத் திருகி அதன் கள்ள மனதாகிய இராஜச தாமசக் கள்ளியைத் தட்டி அதிலிருந்து மாறாமல் வரக்கூடிய பாலை ஆத்திரமாக உண்டு கொண்டிருக்கக் கூடிய ஓர் சிஷ்யனைத் தேடிக் கொண்டு ஓர் **அபரோக்ஷ ஞானேஸ்வரர்** தவமார்ந்த இவ்வனத்துள் தங்கியிருக்கிறார்.

## 16. சூக்ஷுமம்

26-10-20 மாலை.

குமணாசாரங்க வனத்தில் ஓர் பெரிய சர்ப்பம் தனது பெரிய வடிவத்தைச் சுருக்கிக் கொண்டு சிறிய துவாரத்துக்குள் திடீரென்று புகுந்து விட்டது. அதுபோல இந்திரியங்கள் பத்து, பிராணன், மனம், அறிவு, அஞ்ஞானம் முதலிய பெரிய வடிவத் தோடிருக்கிற ஜீவாத்மா தன் வடிவத்தைச் சுருக்கிக் கொண்டு பரமாத்ம துரிய துவாரத்துக்குள் திடீரென்று நுழைந்துவிடக் கூடிய அறிவார்ந்திரா நின்ற சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்வனத்தில் ஓர் **சகசானந்த மஹரிஷி** தங்கி யிருக்கிறார்.

## 17. தந்திரம்

26-10-20 இரவு.

குமண மன்னன் குளிர்ந்த வனத்தில் அமைக்கப்பட்ட சிதானந்தாஸ்ரமத்தின்மீது தென்னைக் கீத்து அடுக்கடுக்காய் வேயப்பட்டிருந்தது. அதில் ஓர் சர்ப்பம் கீத்தின் மேலே போகாமலும் கிழே இறங்காமலும் நடு மத்தியிலேயே ஒருவருக்குந் தெரியாமல் மெதுவாக சஞ்சாரஞ் செய்து கொண்டிருந்தது. அது போல மாயாமயப் பிரபஞ்சக் கீத்தாஸ்ரமத்தின் மேலே போகாமலும் கீழேயிறங்காமலும் வெகு தந்திரமாக இடைவெட்ட வெளியில் சஞ்சரிக்கக் கூடிய ஸ்தூல வடிவமுள்ள ஓர் சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்விகசிதாரண்யத்துள் ஓர் **மஹா சன்யாஸி** சஞ்சாரஞ் செய்து வருகிறார்.

## 18. வினய சம்பத்து

27-10-20 காலை.

குமணவனத்துப் புதரண்டை ஓர் தந்திரசாலி சென்றான். ஓர் வீர்யமுள்ள சர்ப்பம் அவனை விரட்டியது. அவன் நேரே ஓடாமல் வளைந்து வளைந்து ஓடினான். பாம்பு ஒய்ந்து நின்று விட்டது. அதுபோல மனதென்னும் புற்றில் வசிக்கப்பட்ட தசேந்திரிய ஞான விரோதப் பாம்புகள் திடீரென்று விரட்டும் போது நேரே ஓடாமல் ஒரு இந்திரியம் விரட்டும்போது மற்றோரிந்திரியத்திலும் ஒளிந்து கொண்டு இப்படியே ஒவ்வோரிந்திரியங்களுக்கும் மாற்றிச் செய்து கொண்டு



வந்தால் இந்திரியப் பாம்புகள் ஒய்ந்து விடும். அப்படிச் செய்தனுபவிக்கக் கூடிய சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்வனத்தில் ஓர் **அதிவருணாச்சிரமி** சஞ்சாரஞ் செய்து வருகிறார்.

## 19. ஏமாற்றம்

27-10-20 காலை.

குமணப் போர் வீரன் குஞ்சரவனத்துள் ஓர் போக்காளி கருவேப்பிலை கொய்யும் உத்தேசமாகி வந்து தேடிப் பார்த்துப் பறித்தான். பின்பு பார்க்க அது கருவேப்பிலை போன்ற மற்றோரிலையாயிருந்தது; எறிந்து விட்டான். அதுபோல ஞானமடையு முத்தேசமாகிச் சர்வ தத்துவங்களையுந் தாண்டிச் செல்லும்போது பொய் ஞானம் மெய் போலக் காட்டி விடும். அதில் மயங்காமல் தள்ளிவிட்டு எதார்த்த ஞான வடிவத்தைக் கண்டுபிடித்திருக்கக் கூடிய ஓர் அற்புத சிஷ்யனை எதிர் பார்த்துக் கொண்டு இந்தக் காட்டுள் ஓர் **சதானந்த யோகீஸ்வரர்** இருக்கிறார்.

## 20. அதிசயம்

27-10-20 மாலை.

குமண வேந்தன் குதூகலத்துடன் வசிந்துவந்த குளிர்ந்த ஆரண்யத்தில் ஓர் தீர்க்கதரிசி பூமியை நோக்கிய வண்ண மாகவே உலாவினார். ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவ ராசிகளில் ஒரே நிமிஷத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து,

முதிர்ந்து, இறந்து விடக் கூடிய அற்ப ஜந்து முதல் மனுஷ்யர் வரை பார்த்து புன்னகை கொண்டனர். அதுபோல மாயா நிலத்தை மிதித்து நடந்து சர்வ பூதங்களையும் பார்த்துக் கடவுளின் சிருஷ்டி உண்மையைக் கண்டுகொண்ட சிஷ்யனை நோக்கிய வண்ணமாய் இவ்வனாந்திரத்தில் ஓர் **அதிமானுஷயோகி** சஞ்சாரமாகவே யிருக்கிறார்.

## 21. உற்பத்தி

27-10-20 மாலை.

குமண ஏந்தல் குடி கொண்டயைந்த வனாந்தரத்தின் புதரண்டை இரண்டு ஆண் சர்ப்பம் ஒன்றோடொன்று பிணைந்து கொண்டிருந்தது. அப்படி பெண் சர்ப்பமும் ஆண் பாம்பும் பிணைந்திருக்குமானால் கெர்ப்ப முண்டாகி விடும். அதுபோல ஜீவாத்மா என்னும் ஆண் சர்ப்பம் மாயை என்கிற பெண் சர்ப்பத்தோடு பிணையுமானால் சங்கற்ப விகற்ப ரூபக் குழந்தைகள் உண்டாகி விடுமாதலால் பரமாத்மா என்னும் ஆண் பாம்புடன் பிணைந்து கொண்டிருக்கக் கூடிய அமானுஷ சிஷ்யனை எதிர் பார்த்துக் கொண்டு இவ்வனத்தில் ஓர் **தபசிரேஷ்டர்** வசித்து வருகிறார்.

## 22. சூதகம்

28-10-20 காலை.

குமண வேந்தன் வனாந்தரத்தின் ஓர் செடியில் அடியிலிருந்து உச்சி வரை கறையான் பூச்சி மண் கட்டியிருந்தது.



ஓர் தடையாளி சென்று முழுதுங் கலைத்து விட்டான். மறுபடியும் இருபது நிமிஷத்திற்குள் முன் போலவே கட்டி விட்டது. இப்படி எத்தனை தரங்கலைத்தாலும் உடனே உண்டாக்கி விடுகிறது. அதுபோல லயம், விக்ஷேபம், கஷாயம், ரஜாஸ்வரதம் முதலிய எத்தனை தடைகள் ஞானாரம்ப காலத்தில் வந்தாலும் ஜயித்து ஆத்ம வடிவத்தில் நிலைத்திருக்கக் கூடிய ஓர் அதிசய சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ் வனத்துள் ஓர் **பிரஹ்மானுபூதிச் செல்வர்** தங்கியிருக்கிறார்.

## 23. வேஷதாரி

28-10-20 மாலை.

குமணனந்த வனத்தில் வட பாரிசத்தில் ஓர் சன்னியாசி மரத்தடியில் உட்கார்ந்து நிஷ்டையி லிருப்பதாகப் பாசாங்கு செய்து கண்ணை மூடிக் கொண்டிருந்தார். அதைக் கண்டு சமீபத்திலுள்ளவர்கள் பெரிய மஹானென்று நினைத்து அதிகமான பால், பழம், கற்கண்டு முதலிய பண்டங்களை ஸ்வாமிகள் முன் குவித்து விட்டார்கள். ஸ்வாமிகள் பார்த்து இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதென்று நிச்சயித்து வெளி வேஷப் பாசாங்கு நிஷ்டைக்கே இவ்வளவு சாமான்கள் வலுவில் வருகிறதே, இனியதார்த்த நிஷ்டைக்கு போக வேண்டுமென்று எண்ணி வடகிழக்கே ஒரு யோசனை தூரத்திலுள்ள ஜம்பகாரண்ய க்ஷேத்திரத்திற்குச் சென்று பிரஹ்ம நிஷ்டையில் கூடி விட்டனர். அதுபோல முதலில் வேஷதாரியாகி அப்பால் உண்மை ஞானியானால் அதிகவுறுதி உண்டாகும். ஆதலால், அத்தகைய அனுஷ்டானமுள்ள

சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்வாரண்யத்துள் ஓர் **இராஜயோகீந்திரர்** தங்கியிருக்கிறார்.

## 24. மழை

29-10-20 காலை.

குமணன் செங்கோல் நடத்திய வனத்தில் மாலை. கனத்த மழை பெய்தது. பூமியை மட்டும் மேலே நனைத்து ஜலம் ஓடிப் போனது. இரவு மெதுவாக மழை பெய்த்து. பூமி முழுவதும் நனைந்து சாவதானமாய் அதிக ஆழத்திலும் மழை ஈரம் பாய்ந்திருந்தது. அதுபோல தடபுடலாய்ச் சீக்கிரம் அப்பியாசம் பண்ணி மனப்பூமியை நனையாது விடாமல் மெதுவாக சாவதானமாக அப்பியாசித்து மனமாகிய பூமியை ஆழமாக நனைவித்திருக்கக் கூடிய ஆழ்ந்த கருத்துள்ள ஓர் அரிய சிஷ்யனை எதிர் நோக்கமாய் இவ்வனாந்தரத்தில் ஓர் **பரமானந்த சாகரர்** தங்கி வருகிறார்.

## 25. ரோஜா

29-10-20 காலை.

குமணச் சக்கிரவர்த்தி வனத்தில் உலாவிக் கொண்டிருந்த யோகீஸ்வரரிடம் ஒருவன் அழகான ரோஜா புஷ்பமொன்று எதிரில் வைத்து நமஸ்கரித்தான். அந்த ரோஜா புஷ்பம் பல இதழ்களோடு கூடியிருந்தும் அவை எல்லாம் ஒரே தண்டில் ஒட்டிக் கொண்டிருந்தன. அதுபோல பல இதழ்களாகிய நினைப்புகளெல்லாம் ஒரே ஆந்மாவாகிய தண்டில் ஒட்டிக்



கொண்டிருக்கின்றன வென்பதை அனுபவத்தில் நேரே கண்டு அனுபவித்த அறிவாளியான அந்தரங்க சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு ஓர் **ஜிஞ்ஜுமாரபத்மாசனர்** இருந்து வருகிறார்.

## 26. அதிகாரம்

29-10-20 காலை.

குமணகேசரி வனத்தில் பல பசு மாடுகள் புல் மேய்ந்து கொண்டிருந்தன. அவைகள் பெரிய புற்களாக வளர்ந்துள்ள இடத்திற் சென்று மேய ஆரம்பித்தது. அப்புற்கள் வாய்க் கெட்டாமல் நாணமடைந்து சிறிய புற்கள் இருக்குமிடத்திற்குச் சென்று சுகமாய் மேய்ந்திருந்தன. அதுபோல ஜனன மரணமாகிய அஞ்ஞானப் பசியைத் தீர்க்கும் பொருட்டுப் பசுவாகிய ஜீவாத்மா அப்பியாசக் காட்டில் மேயும் போது அகண்ட ஞானப் புல்லை மேயச் சென்று நாணமடை யாமல் சரியை கிரியை என்கிற சிறிய புற்களை மேய்ந்து வயிறு நிரம்பி யிருக்கக் கூடிய அதியாற்றலுள்ள சிஷ்யனை எதிர் பார்த்துக் கொண்டு இவ்வாரணயத்துள் ஓர் **ஞான சித்தர்** தங்கி யிருக்கிறார்.

## 27. பரிகாரி

29-10-20 மாலை.

குமணராஜமானத வனத்தில் ஓர் பெரியவருக்குப் பரிகாரி ஒருவன் க்ஷவரஞ் செய்தான். மறுபடியும் க்ஷவரஞ் செய்த

இடங்களிலெல்லாம் ரோமம் முளைத்து விட்டன. அதுபோல அஞ்ஞான ரோமத்தை நிருவிகற்ப சமாதிக் கத்தியினால் க்ஷவரஞ் செய்தால் மறுபடியும் முளைத்து விடுமாதலால் இனிமேல் முளைக்க விடாத சகச நிஷ்டை என்ற கத்தியினால் க்ஷவரஞ் செய்து கொண்ட ஓரற்புத சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டே இவ்வனத்தில் ஓர் **பிரஹ்ம நிஷ்டாபரர்** சஞ்சாரஞ் செய்து வருகிறார்.

## 28. கீரி

29-10-20 மாலை.

குமண ராஜன் குங்கு வனத்தில் ஓர் கீரி சர்ப்பமொன்றைக் கடிக்க எண்ணி விரட்டியது. சர்ப்பம் ஓடி ஒளிந்து பார்த்தும் கீரி விடவில்லை. அப்பால் கீரி வரமுடியாத சிறிய துவாரத்துள் சர்ப்பம் புகுந்து கொண்டது. கீரி உள்ளே புக முடியாது திரும்பி விட்டது. அதுபோல மஹாமாயையென்னும் கீரியானது ஜீவாத்ம சர்ப்பத்தை விரட்ட, அது சரியை, கிரியை, யோகம் முதலிய கண்டவிடங் களிலெல்லாம் ஓடி ஒளியப் பின்னும் மாயை விடாது விரட்டுவதைக் கண்ட ஜீவாத்மக் கீரியானது மஹா தந்திரமுள்ள மாயை வர முடியாத பரப்பிரஹ்ம குகைக்குள் ஒளிந்து கொள்ள மாயைக் கீரி ஓடி விட்டதைத் தானே அனுபவித்த உத்தம சிஷ்யனை எதிர் பார்த்துக் கொண்டு இவ்வனாந்தரத்தில் ஓர் **மஹாமாயதுரந்தரர்** எழுந்தருளியிருக்கிறார்.



## 29. நரி

29-10-20 காலை.

குமணாமிர்த வனத்தில் உல்லாசமாக உலாவிக் கொண்டிருக்கும்போது எதிரே ஒரு நரி ஓடி வந்தது. என்னைக் கண்ட உடன் தன் உத்தேசமான பயணத்தை நிறுத்தாமல் என்னை வெகு தந்திரமாக வளைந்து கொண்டு ஓடிவிட்டது. அதுபோல மோக்ஷமடையும் முயற்சி பலமாக செய்து கொண்டு போகும் போது இடையில் வரக்கூடிய தீரமான மாயா விலாஸங் களை கண்டு வளைந்து ஓடிப்போய்த் தன் உத்தேசத்தை முடித்துக் கொண்ட ஓரதிசயமான சிஷ்யனை எதிர்பார்த்து கொண்டு இவ்வனாந்தரத்தில் ஓர் **தபோசிரேஷ்டர்** தங்கி வருகிறார்.

## 30. அணில்

29-10-20 மாலை.

குமண மஹாராஜன் தன் தம்பியின் அதிகாரத்திற்குப் பயந்து ஒளிந்து கொண்டிருந்த இவ்வனத்தில் ஓர் மரத்தடி யில் செல்லும்போது சில அணில்கள் என்னைக் கண்டு கூச்சலிட ஆரம்பித்தன. அதுபோல, மாயா மயக்கமாகிய துவைத பாவனையைக் கண்டவுடன் அகங்கார வாலைத் தூக்கிக் கொண்டு பகவானை நினைத்துக் கதறுகிற உத்தம பக்தி வாய்ந்த சிஷ்யனைத் தேடிக் கொண்டு இந்த ஆரண்யத்தில் ஓர் **ஜெஜமார்த்தனி யோகி** சஞ்சாரம் செய்து வருகிறார்.

## 31. எறும்பு

30-10-20 காலை.

குமண ராஜன் குஞ்சர பூமியாகிய இவ்வனத்தில் ஓரிடத்தில் தனிமையாக உட்கார்ந்திருக்கும் போது சரீரத்தில் பெரிய எறும்பு ஒன்றும் சிறிய எறும்பு ஒன்றும் ஏறின. பேசாதிருந்தேன். பெரிது கடிக்கவில்லை. சிறிது பலமாக கடித்து விட்டது. அதுபோல மனதின்மீது சாத்விக குணப் பெரிய எறும்பும் இராஜச தாமத குணச் சிற்றெறும்பும் ஏறி யிருக்கின்றன. பெரிய எறும்பு கடிக்கிறதேயில்லை. சிறிய எறும்பு கடித்து விடுமாதலால் அதை எடுத்துவிடக் கூடிய உறுதியுள்ள சிஷ்யனை எதிர் பார்த்துக் கொண்டு இவ்வனத் துள் ஓர் ஞானாரண்யர் சஞ்சாரம் செய்து வருகிறார்.

## 32. மாமரம்

30-10-20 காலை.

குமண மன்னன் அரசாண்ட வனத்தில் போய்க் கொண்டி ருக்கும்போது எதிரே ஓர் அழகிய மாமரம் தோன்றிற்று. அதில் மாமரத்துக்கு விரோதமான புல்லுருவிகள் பல இருந்தன. அவை நாளடைவில் மரத்தைக் கெடுத்து விடும். அதுபோல இயற்கை மனதென்கிற மாமரத்தில் சோம்பல், நித்திரை, மைதுனம், ஏமாற்றம், அசத்தி முதலிய புல்லுருவிகள் படர்ந்து விட்டன. அவை யதார்த்த ஞானத்திற்கு விரோதத்தை உண்டு பண்ணுமாகாயால் அப்புல்லுருவிகளை பறித்தெறிந்த சிஷ்யனைத் தேடிக் கொண்டு இந்த வனாந்தரத்தில் ஓர் தீர முனீந்திரர் தங்கியிருக்கிறார்.



## 33. சயனம்

30-10-20 காலை.

குமண வேந்தன் கொலுவிலிருந்த ஆரண்யத்தில் ஓர் தவராஜயோகி இலவம்பஞ்சினால் செய்த மெத்தையின்மீது சயனித்திருந்தார். அவரிடம் ஓர் சிவராஜ யோகி சென்றார். தவராஜ யோகி எழுந்து உட்கார்ந்தார். பின்பு தவராஜர் சிவராஜரை நோக்கி, ஏன் இந்த மெத்தையில் நான்கங்கு லத்திற்கு ஓர் தையல் பலமாகப் போட்டிருக்கிறது என்றார். உடனே சிவராஜர் தையல் போடாமல் போனால் எல்லாப் பஞ்சு களும் ஒன்று சேர்ந்து கொண்டு சயன சுகத்தை மாற்றி விடு மென்று சயன சுகானுபவிகள் செய்திருக்கிறார்கள் என்றார். அதுபோல தூங்காமல் தூங்குதலென்னும் ஞானசயன சுகத்தை அடைய வேண்டுமானால் எல்லா இந்திரியங் களையும் அதன் அதன் நிலையில் நிறுத்தி விடும்படியான பலமான தையல் போட்டுவிட்டு தான் மாத்திரம் பிரம்ம சுகானுபவ பஞ்சணை மீது ஏறிப் படுத்துக் கொண்டு நித்திரை செய்ய வேண்டும். அப்படி நித்திரை செய்யக் கூடிய அதிவல்லமையுள்ள ஓர் சிஷ்யனைத் தேடிக் கொண்டு இந்த ஆரண்யத்தில் ஓர் முனி புங்கவர் சஞ்சாரஞ் செய்கிறார்.

## 34. அபிமானம்

30-10-20 காலை.

குமணேந்திரன் வாசஞ் செய்த வனாந்தரத்தின் மத்தியில் ஓர் சன்னியாஸி மற்றோர் சன்னியாசியைச் சந்தித்து நீங்களேன்

உலகத்தில் உலாவுகிறீர் களென்றார். அதற்கு அவர் அபிமானத்தாலென்றார். உங்களைப் போலொத்த ஞானிகளுக்கு அபிமானங் கூடுமோ வென்றார். அதற்குப் பதிலாக அவர் பிரம்மா, அபிமானத்தாலேயே உலகத்தை சிருஷ்டிக்கிறான். விஷ்ணு ரக்ஷிக்கிறான், சிவன் அழிக்கிறான், சூரியன் ஓடுகிறான், சந்திரன் சலனமடைகிறான், நவக்கிரஹங் களும் தத்தளிக்கின்றன. எல்லா தேவர்களும் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். தக்ஷிணாமூர்த்தி கல்லால மரத்தடியில் கற்பகோடி காலம் வீற்றிருந்தார். இராமர் இராமாயணம் முடித்தார். கிருஷ்ணன் பாரத யுத்தம் நடத்தும் படி ஏவினார். அபிமானமில்லாமல் யாரும் ஸ்தூல சரீரத்துடன் அரை க்ஷணம் இருக்க முடியாது என்றனர். அதுபோல, ஆத்மப் பிரஹ்ம ஞானம் ஒன்றுமட்டுங் கொண்டு மற்ற அபிமானங் களை அறவொழித்த முக்கியமான ஓர் சிஷ்யனை எதிர்பார்த்த வண்ணமாய் இந்தக் காட்டிற்குள் **முக்தாதீத முநீந்திரர்** சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்.

## 35. இடி

30-10-20 மாலை.

குமணவேந்தன் அரசு புரிந்த வனாந்திரத்தில் நடுப் பகலில் இடி இடித்தது. அது எங்கே இடித்ததென்று பார்க்கும் பொழுது ஆகாயத்திலென்றே தோன்றிற்று. ஆனால் ஞானிகள் மாத்திரம் மனதில் இடித்ததென்பார்கள். எவ்வளவு பலமாக இடி இடித்ததோ அவ்வளவு பலமாக மழையில்லை. அதுபோல, சாஸ்திரக் குப்பைகளை இடிபோல எவ்வளவு கத்தினாலும்



அதற்குத் தக்கபடி சுபானுபவம் பலமில்லாமலாய் விடும். ஆதலால் சாஸ்திர ஆராய்ச்சியைச் சுருக்கி அனுபவத்தை அதிகமாக்கிக் கொண்ட சிஷ்யனை எதிர் பார்த்துக் கொண்டு இவ்வனத்தில் ஓர் **ரிஷீஸ்வரர்** சஞ்சாரம் செய்கிறார்.

## 36. கொசுகு

30-10-20 மாலை.

குமணப் புரவலன் தர்பார் நடத்திய மேடையின்மீது உட்கார்ந்திருந்தபோது சில கொசுகுகள் காதில் வந்து சப்த மிட்டன. அவைகள் மற்ற ஹிம்சைகள் ஒன்றுஞ் செய்ய வில்லை. சப்தமட்டுந்தானிருந்தது. அதுபோல சாஸ்திரங்களை நிறையக் கற்று முன் சொன்ன கொசுகைப் போலக் காதில் வருபவருக் கெல்லாம் பலமாய்ப் போதிக்கிறவர்களிடம் வேறு ஒரு அனுபவமும் இராது. போதித்தல் மாத்திரந்தானுண்டு. அப்படியிராமல் சாஸ்திர ஆராய்ச்சியோடு அனுபவமுங்கூட இருந்து கொண்டி ருக்கக் கூடிய ஓர் முக்கிய சிஷ்யனை எதிர்பார்த்து கொண்டு இந்த வனத்தில் ஓர் **பிரஹ்மானுபூதிச் செல்வர்** வசித்து வருகிறார்.

## 37. தவளை

1-11-20 காலை.

குமணகுரிசில் குடி கொண்ட மைத்த வனத்தில் பலத்த மழை பெய்தது. கொஞ்ச நேரம் கழித்துப் பல தவளைகள் பலமாய் கூச்சலிட ஆரம்பித்தன. சிறிது நாழிகை கழித்து சப்தம் அடங்கி விட்டன. அதுபோல, ஞானாரம்ப காலத்தில்

அப்பியாஸ மழையால் முமுக்ஷுத் தவளைகளை ஞானத்தைப் பற்றிக் கூச்சலிட ஆரம்பிக்கின்றன. கொஞ்ச காலங் கழித்து அந்தக் கூச்சலும் நின்று போய்விடுகிறது. அப்படிக் கூச்ச லடங்கி நிற்கின்ற சிஷ்யனொருவனைத் தேடிக் கொண்டு இவ்வாரண்யத்தில் ஓர் **பெருந்துறவி** வசிக்கிறார்.

## 38. மரணம்

**1-11-20 காலை.**

குமணப்புவி இந்திரன் வசித்து வந்த கனகாரண்யத்தில் ஓர் தபசி ஓர் பக்தரைச் சந்தித்தார். தபசி பக்தரைப் பார்த்து நீங்களேன் வெகு ஆடம்பரமாக இருக்கிறீர் களென்றார். பக்தர் நான் மரணத்தை மறந்து விடவில்லை. மரண ஞாபகம் விடாது. என்னைத் தொடர்ந்தாலும் பிராரத்த வினையானது போக ஆடம்பரத்தைக் கூட்டி வைக்கிறது. அதில் எனக்கு மயக்க மில்லையென்றார். அதுபோல சதா மரண நினைவே கொண்டு உலக விஷயங்களில் யாதொரு மயக்கமுமின்றி அதிதீவிரமான சிஷ்யனைப் பார்த்துக் கொண்டு இவ்வனத்துள்ளில் ஓர் **நிரந்தர துரந்தரர்** வசித்து வருகிறார்.

## 39. ஒற்றுமை

**1-1-20 காலை.**

குமணக்குரிசில் வசித்த வனத்தில் இரவு நடுவில் ஓர் ஆண் பக்ஷி கூவியதைக் கேட்டு உடனே தன் புருஷனென்று நிச்சயித்துப் பெண் பக்ஷியும் கூவியது. இப்படியே அடிக்கடி



கூவி வந்தது. அதுபோல ஈஸ்வரப் பக்ஷி எந்தப் பரிபக்குவ முள்ள சிஷ்யனை நோக்கிக் கூவுகிறதோ அதைக் கண்டு பிடித்துப் பதில் கூவக் கூடிய தெய்வீக சக்தி வாய்ந்துள்ள ஓர் அந்தரங்க சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இந்த வனாந் தரத்தில் **அவதார புருஷர்** ஒருவர் எழுந்தருளியிருக்கிறார்.

## 40. சக்தி

**1-11-20 பகல்.**

குமணேந்திரப் பிரபு வசித்து வந்த வனாந்தரக் காட்டில் ஓர் சர்ப்பம் தவளையொன்றைப் பற்றிக் கொண்டு பாதியுள்ளிலும் பாதி வெளியிலுமாக விழுங்கப் பட்டிருந்தது. ஆனாலும் தனது இனத்தின் தன்மையான சப்தத்தைத் தவளை விடவேயில்லை. அதுபோல மஹா மாயை என்கிற பாம்பின் வாயில் பாதி பட்டுக் கொண்டு முழிக்கிற ஜீவாத்மத் தவளை யானது தனது இன சுபாவத்தை மறந்து விடாது மாயா சர்ப்பத்தின் வாயினின்று மீண்டு வரக்கூடிய அதிசாமர்த்திய முள்ள ஓர் சிஷ்யனைத் தேடிக் கெண்டு ஓர் **ஹம்ஸாம்ஸ அந்தர்முக யோகி** விஜயமாகி இருக்கிறார்.

## 41. குமண வனம்

**1-11-20 பகல்.**

குமணானந்தன் குறித்த வனத்தில் பல புதர்கள், புற்று, செடி, மரம், கொடி முதலியன அடர்ந்த வனத்தின் சுகங்களை

அடைய முடியாதிருப்பது பற்றி விஸ்தாரமான காட்டின் மத்தியில் பல பெரிய உயரமான பாதைகள், சிறிய வழிகள் இவைகளை நிர்மாணித்துப் புதர் புற்று முதலியவைகளை விலக்கி விட்டு சுத்தப்படுத்தி விட்டதால் வனத்தின் சம்பூர்ண லாப சுகங்களை யாவரும் அனுபவிக்க ஏதுவாகியிருக்கின்றன. அதுபோல மனதென்னும் விஸ்தாரமான காட்டில் அகங்காரமாகிய புதர்கள், மமதையாகிய புற்றுகள், கோபமாகிய கொடிகள், இச்சையாகிய மரங்கள் முதலியன அடர்ந்திருப்பதனால் மனதின் பூர்ண ஆத்மஞான இன்பத்தை அடைய முடியாமலிருக்கிறது. அதற்கு நடு மன வனத்தில் வருணாச்சிரம தருமமாகிய உயர்ந்த மேட்டுப் பாதைகளும் விக்கிரஹ ஆராதனை, சகுண த்யானம், பிராமண பூஜை, பசு பூஜை, தெய்வ பூஜை முதலிய சிறிய பாதைகளும் ஏற்பாடு செய்து மேற்கூறிய புதர்களையெல்லாம் அதி சீக்கிரத்தில் நாசஞ் செய்துவிடக் கூடிய ஆச்சரியகரமான ஓர் சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வனத்தில் ஓர் **சாந்த ஞான பரமஹம்ஸர்** தங்கி வருகிறார்.

## 42. செந்தொட்டி

1-11-20 மாலை.

குமணராஜன் குண்டலி வனத்தில் ஒருவன் பார்க்கக் குளிர்ச்சியாயுள்ள ஓர் செடியினண்டை உறசிக் கொண்டு உட்கார்ந்தான். அந்தச் செடி மேலே பட்டவுடன் அபாரமான



எரிச்சலுண்டாக்கி விட்டது. அந்தச் செடியைப் பார்க்க செந்தொட்டியாகவே இருந்தது. அதுபோல மாயா மயக்கங்களும், உலக விஷய போகங்களும், போலிச் சன்னியாசிகளும், பார்ப்பதற்குப் பசுமை நிறமாகிப் பற்றுண்டாக்கி மனதிற்கு ரம்மியத்தை உண்டு பண்ணும். சமீபத்திற் போகும் வரை ஒன்றுஞ் செய்யாது. தொட்டு விட்டால் ஜனன மரணமாகிய பெரிய எரிச்சலுண்டாக்கி விடுமாதலால் அத்தகைய மாயாவிகாரமாகிய செந்தொட்டிச் செடியனருகே செல்லாத உத்தம சிஷ்யனை யெதிர் பார்த்துக் கொண்டு இவ்வனத்தில் ஓர் **நிச்சிலார்ப்புத நித்தியானந்த பரம யோகீஸ்வரர்** தங்கியிருக்கிறார்.

## 43. ஆட்டம்

1-11-20 மாலை.

குமணவனத்தில் ஓர் பலமான நாக சர்ப்பம் படத்தை விரித்து ஆடிக் கொண்டிருந்தது. அது தன் நிலைமையை மறந்து போகாமலும் ஆட்டமும் குறையாமலும் தன்னையும் தன்னைச் சுற்றியும் பார்த்துக் கொண்டு ஆடிக் கொண்டிருந்தது. அதுபோல எவ்வளவு உலக விஷய காரியங்களில் டம்பமாக ஆடிக் கொண்டிருந்தாலும் எந்தவிதமாக ஓடிக் கொண்டிருந்த போதிலும் தன்னிலையை மறவாமல் உலக ஆட்டமும் ஆடிக் கொண்டிருக்கக் கூடிய ஓர் சிஷ்யனை தேடிக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **சுவாதந்திரிய புருஷர்** தங்கி வருகிறார்.

## 44. தடாகம்

**2-11-20 காலை.**

குமணச்சக்கிரவர்த்தி அரசாண்ட மேடை வனத்தின் மேற் பாரிசமுள்ள சிறிய தடாகத்தில் ஓர் முதியோர் ஆழமில்லை யென்றெண்ணி இறங்கினார். அது இறங்க இறங்க வெகு ஆழமாக இருந்தது. அதுபோல பார்ப்பதற்குச் சிறிய உருவமும், டம்பமும், விரிந்த மனம் இவைகளின்றி உள்ளில் பலமான ஆழத்தோடு கூடிய ஓர் சிஷ்யனைத் தேடிக் கொண்டு ஓர் **மஹான்** இவ்வனத்துள் இருக்கிறார்.

## 45. வௌவால்

**2-11-20 காலை.**

குமணராஜன் தர்பார் மேடை நடுவில் சுற்றிப் பலமான படுதாக் கட்டியிருந்தது. ஓர் வௌவால் ஓர் மூலையிற் பற்றி ஏறியது. வழுக்கிட்டது. மறுபடியும் ஓர் மூலையிற் ஓடிப் பற்றியது. இப்படியே பல தடவைகளிலும் பல மூலைகளிலும் பற்றிப்பற்றி வழுக்கிவிடக் கடைசியாக ஓர் மூலையில் பலமாக பற்றிக் கொண்டது. அதுபோல சமாதி ஞானாப்யாசிகள் மனதை பரமாத்மாவினிடத்தே செலுத்த சர்வ தத்துவங்களையுங் கடந்து ஏறும்போது வழுக்கி விடும். அதையும் நாடாமல் திடமாக ஆத்மாவிற் பற்றிவிடக் கூடிய அற்புத சிஷ்யனை எதிர் பார்த்துக் கொண்டு இவ்வாரண்யத்தில் ஓர் **பிரம்ம சாக்ஷாத்கார முனிவர்** தங்கியிருக்கிறார்.



## 46. பக்ஷி ராஜன்

**3-11-20 காலை.**

குமண ராஜன் அரசாக்ஷி செய்த வனத்தின் எல்லையின் ஆகாயத்தில் ஓர் பக்ஷி ராஜர் பல பருந்துகளுடன் உல்லாசமாக வெகு ஆடம்பரத்துடன் பறந்து கொண்டிருந்தது. ஆனாலும் அதன் முழுப் பார்வை மட்டும் பூமியின் சூக்ஷுமவஸ்துக் களின் மேலேயே இருந்தது. அதுபோல எத்தனை உலக மனுஷ்யர்களோடு எத்தனைவித போகாடம்பரங்களுடன் உலகத்தில் விளையாடிக் கொண்டிருந்தாலும் மனது மாத்திரம் சூக்ஷுமவஸ்துவாகிய பரமாத்மாவினிடம் பார்வை கொண்டி ருக்கிற ஓர் முக்கிய சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **மந்திரமாலிகாபரணர்** தங்கி வருகிறார்.

## 47. ஆந்தை

**3-11-20 காலை.**

குமண மன்னன் வசித்த ஆரண்யத்தில் வடபாரிசத்தில் ஓர் பெரிய பலாமரப் பொந்தில் ஆந்தையொன்று வசித்துக் கொண்டிருந்தது. அது அவ்வழியே சென்ற ஓர் துறவியைக் கண்டு மெதுவாக கத்தித் தனது பொந்தில் நுழைந்து மறைந்து கொண்டது. அதுபோல ஆத்ம சுகத்தை அடையாத மற்றவர் களை மயக்கிவிடக் கூடிய மாயாமயப் பெண்களைக் கண்டு மெதுவாகத் தனது துரியானுபவ பொந்துக்குள் நுழைந்து கொள்ளக் கூடிய அபரோக்ஷ ஞானியான சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **சர்ப்பாபரண சம்பூஜிதர்** வசித்து வருகிறார்.

## 48. விளாம்பழம்

3-11-20 மாலை.

குமண மன்னன் அரசாண்ட மேடை வனத்துள் சிதானந்தாஸ்ரமத்துக்கு அருகேயுள்ள விளாமரத்தடியில் பல பழங்களிருந்தன. அதிலொன்று பக்குவமாகி பலாத்காரமின்றித் தானே பற்றுவிட்டு மரத்தினின்று பூமியில் விழுந்தது. அதைத் தின்பதற்கும் ருசியாயிருந்தது. அதுபோல உலக குடும்ப மென்கிற விளாமரத்தின் மேலே பல மனிதப் பழங்களிருந் தாலும் தானே பக்குவமாகிப் பற்றற்றுக் கனிந்து விழக் கூடிய அந்தரங்க சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இந்த வனத்தில் ஓர் **அமலாரண்ய அச்சுதர்** வசித்து வருகிறார்.

## 49. ரகஸ்யப் பக்ஷிகள்

3-11-20 மாலை.

குமண வனத்தில் ஓர் மரத்தினடியில் இரண்டு பக்ஷிகள் உல்லாசமாக உலாவிக் கொண்டிருந்தன. வடக்கேயிருந்து ஓர் பால்ய சந்நியாசியும் தெற்கேயிருந்து ஓர் விருத்த சன்னியாசி யும் அம்மரத்தடிக்கு வந்தனர். இரண்டு பக்ஷிகளும் பறந்து விட்டன. ஒன்று காணாமற் போய்விட்டது; ஒன்றுதானிந்தது. அதுபோல மாயாமயக் குமண வனத்தில் அஞ்ஞான மாமரத்தி னடியில் ஜீவன், ஈஸ்வரன் என்ற இரண்டு பக்ஷிகளிருந்தன. வடக்கேயிருந்து உபதேசமும் தெற்கேயிருந்து அனுபவமும் மரத்தடிக்கு வந்தன. இரண்டு பக்ஷியும் பறந்ததில் ஜீவப் பக்ஷி மறைந்துவிட ஈஸ்வரப் பக்ஷி மாத்திரம் மிஞ்சும்படி செய்து



கொண்ட அனுபவியான ஓர் சிஷ்யனைத் தேடிக் கொண்டு இவ்வாரண்யத்தில் ஓர் **ஆரூடானந்த அஞ்சலர்** இருந்து வருகிறார்.

## 50. எதார்த்தம்

4-11-20 காலை.

குமண சக்கிரவர்த்தி ஆயிரம் வருஷங்களுக்கு முன் இவ்வனத்தில் தன் தம்பியாகிய அமணனுக்குப் பயந்து ஒளிந்திருந்தான். அப்போது இவ்வனம் இன்னும் விஸ்தாரமா யிருந்தது. மேடை கிடையாது. புலி, கரடி, யானை முதலிய மிருகங்கள் வசித்துக் கொண்டிருந்தன. பெரிய பாம்புகள் குடிக் கொண்டிருந்தன. பல முனீஸ்வரர்கள், ரிஷீஸ்வரர்கள் முனீந்திரர்கள் ஞானிகள் சித்தர்கள் இவர்கள் அதிகமாகி ஆஸ்ரமங்களுடன் வசித்து வந்தார்கள். குமணன் அந்த சித்தர்கள் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டு சில கால மிருந்தான். அப்போது இந்த வனத்திற்கு தமலாரண்யம் என்ற பெயர் இருந்தது. அதன் பின் குமணனும் தம்பியும் சமாதான மான பின்பு இவ்வனத்திற்குக் **குமணாரண்யம்** என்ற பெயரிட்டு நடுவில் ஓர் பலமான யந்திர ஸ்தாபனஞ் செய்து ஓர் மஹான் சமாதியுடன் பெரிய கட்டிடமொன்று கட்டப்பட்டது. அப்பால் குமணனிடம் ஓர் சமாதி சித்தர் வந்து நிருவிகற்ப நிஷ்டையில் சிலகாலமிருக்க வேண்டி இவ்வனத்தில் இடம் கேட்டனர். குமணன் இசைந்து நிருதி மூலையில் ஓர் சமாதியறை கட்டுவித்து ஏற்பாடு செய்தான். சித்தர் நிஷ்டையிலமர்ந்தனர். அதன்பின் குமணன்

காலத்திற்குப் பின் பலரால் கையாண்டு வரப்பட்டது. அப்போது சித்தர் சமாதியிலிருப்பது ஒருவருக்கும் தெரியாது. கடைசியாக மஹாராஷ்டிர அரசன் தஞ்சை மாநகர பரிபாலகன் ஒருவன் பல ஆட்களை ஏவி வனத்தை வெட்டும் படி உத்திரவு செய்ய ஆட்கள் தெரியாமல் சமாதியிலிருந்த சித்தர் தலையில் வெட்டி இரத்தம் வெளி கிளம்பியது. இதை அரசனுக்கறிவிக்க அரசன் மந்திரியுடன் வந்து நமஸ்கரித்தான். சித்தர் விழித்து, இவ்வனத்தை வெட்டாதே என்று மறுபடியும் நிஷ்டைக்குப் போய்விட்டார். அந்த சித்தர் இன்னுமவ்விடத்திலேயே நிஷ்டை கூடி இருக்கின்றனர். அவர் வெளி வருங் காலம் சமீபமாகி விட்டது. இனி இவ்வனத்தில் வெகு கெம்பீர மான சந்நியாசிகள் நிறைந்து விடுவார்கள். இந்த வனத்திலுள்ள மதமொழிந்த ஞான சித்தருக்கே குஞ்சரம் என்றது அதனால் இந்த சாஸ்திரத்திற்கும் **குமரணாரண்ய குஞ்சரம்** என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

-: ஓம் தத் சத் :-

## வாழி

வாழ்க இன்னகர் மாமறை யாளரும்
வாழ்க இவ்வனம் வாழ்ந்திடு குஞ்சரம்
வாழ்க நிஷ்டை வழியினை விட்டுமே
வாழ்க வையம் வருபவர் வாழ்கவே.

-: ஓம் தத் சத் :-

## குமணாரண்ய குஞ்சரம்

சைவத்தினாசா னால்வர் சார்பத சுமலம் போற்றி
உய்வித்த வாழ்வாராதி வுயரடிவுணர்ந்து போற்றிக்
கைவைத்த கல்லானீழற் காரணக் குருவே போற்றி
செய்வித்த ஞானபோதச் சிற்பரத்துணர்வே போற்றி.

*இரண்டிலா ஞானமெல்லா ரிடத்தினு மினிதாய்த்தங்க*
*முரண்படுந்து வைதஞான முதிர்ச்சி யாலறிவுபாய்ந்து*
*அரண்கெட வான்மாஞான மழிந்திடச் செய்ததந்தோ*
*பரண்கொடுக்கின்ற மேலோர் பாதத்தில் வீழ்வீரம்மா.*

## 1. இயற்கை

21-10-20 மாலை.

குமண மஹாராஜன் கோமள வனத்தில் ஓர் அழகிய இனிப்புப் பழமுள்ள மாமரத்தில் ஓர் வேம்பு மரம் நன்றாக ஒட்டிக் கொண்டு வளர்ந்திருந்தது. அப்படியிருந்தும் மாமரத்தின் இயற்கை குணத்தை மாற்ற வேம்பு மரத்தால் முடியவில்லை. அதுபோல, மனது என்னும் மாற்றமில்லாத இன்பமேயுள்ள சாத்வீக மாமரத்தில் சேர்க்கையான இராஜச தாமத வேம்பு மரம் ஒட்டியிருந்தாலும் தமது இயற்கைக் குணத்தை மாற்றவிடாத ஆற்றலுள்ள அதியற்புத சிஷ்யனை எதிர்பார்த்துக் கொண்டு இவ்வனத்துள் ஓர் **சிதானந்த யோகீந்திரர்** சஞ்சரித்து வருகிறார்.



## 2. நாவற்பழம்

21-10-20 மாலை.

குமணச் சக்கிரவர்த்தி அரசாக்ஷி செய்த மேடையிருக்கிற வனத்தின் நடுமத்தியில் நான்கடி உயரமுள்ள பழுத்து நிறைந்திருக்கிற நாவல் மரத்தண்டை சென்று அதிலுள்ள பழங்களைப் பறிக்கச் சிலது பழங்கள் கை வைத்தவுடன் கைக்கு வந்தன. கொஞ்சம் பலமாய் இழுத்தப்பின் சில பழங்கள் வந்தன. அவற்றில் கை வைத்தவுடன் வந்த பழங்களைத் தின்றதில் மதுரமாகவும் கொட்டைக்கும் தோலுக்குமுள்ள பிடிப்பு விடுபட்டிருந்தன. பலமாகப் பறித்த பழம் துவர்ப்பும் புளிப்புமாயிருந்தன. எறிந்து விட்டேன். அதுபோல, ஈஸ்வரா னுக்ரகமுடைய அவதார புருஷர்களும் உலக மென்னும் நாவல் மரத்தடியிற் சென்று மனிதர்களென்னும் பழம் பறித்து அதன் ஆனந்தத்தைத் தின்ன ஆரம்பிக்கிறார்கள். அதில் உபதேசம் பெற்றுக் கையை தலையில் வைத்தவுடன் புறப்படுகிற சிஷ்யப்பழங்களும், கொஞ்சம் பலமாக உபதேசம் செய்து பிடிப்பு விடாது புறப்படுகிற சிஷ்யப் பழங்களும் இருக்கின்றன. இவற்றில் திடீரென்று பற்றற்று புறப்படக் கூடிய சிஷ்யானுபவம் கனிந்து தோடு விட்டிருப்பதால் ஆசார்யர் அந்தப்பழத்தை அனுபவிக்கிறார். பிடிப்புள்ள சிஷ்யப் பழங் களை எறிந்து விடுகிறார். அதில் சர்வ தத்துவத் தோலின் மீது பிடிப்பு விட்டிருக்கக் கூடிய ஓர் சிஷ்யனை எதிர்பார்த்த வண்ணமாய் இவ்வாரண்யத்தில் ஓர் **நவாத சித்தர்** தங்கி யிருக்கிறார்.